**ARTICLE 48 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00069**
Vol. 20, No. 01 (October 2026) – Part II | pp. 136–142
Received: 1 October 2026 • Accepted: 3 October 2026

# அ.மாதவையாவின் விஜய மார்த்தாண்டம் நாவலில் நாட்டுப்புறக்கூறுகள்

**முனைவர். மகேஷ் பாண்டி சு**[1,*]

[1]கௌரவ விரிவுரையாளர் (தமிழ்), தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சங்கரன்கோவில்., India

***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** முனைவர். மகேஷ் பாண்டி சு — tamilseminar12@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

தமிழ் நாவல் இலக்கியத்தின் தொடக்க கால வளர்ச்சியில் அ.மாதவையாவிற்கு குறிப்பிடத்தக்க இடமுண்டு. சமூக சீர்திருத்த நோக்கத்தையும் நடப்பியல் பார்வையையும் அடிப்படையாகக் கொண்டு படைப்புகளை உருவாக்கிய மாதவையா, தமது நாவல்களில் நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் கூறுகளையும் பதிவு செய்துள்ளார். குறிப்பாக விஜயமார்த்தாண்டம் என்ற நாவல் மறவர் சமூகத்தின் வாழ்க்கைச் சூழலை மையப்படுத்தி அமைந்துள்ளதால் அச்சமூகத்தின் பேச்சு வழக்கு, பழமொழிகள், நாட்டுப்புறப் பாடல்கள், தாலாட்டு, ஆண்டிப்பாட்டு, தர்க்கப்பாட்டு போன்ற பல்வேறு நாட்டுப்புறக் கூறுகள் நாவலுக்குள் இடம்பெறுகின்றன. நாவலின் கதையமைப்பு, சமூகப் பண்பாடு ஆகியவற்றோடு தொடர்புகின்றன என்பதை ஆராய்கிறது.

**Keywords / திறவுச் சொற்கள்:** அ.மாதவையா – ராஜ் கௌதமன் – விஜய மார்த்தாண்டம் – நாவல் – நாட்டுப்புறப் பண்பாடு – பழமொழிகள் – நாட்டுப்புறப் பாடல்கள் – மறவர் பாட்டு – தாலாட்டு – தர்க்கப் பாட்டு – ஆண்டிப் பாட்டு – மறவர்களின் உரையாடல்கள் – அழறாய் – சீமந்தினி – சிவகாமி – சுலோசனாசதி – அபிமன்யு சுந்தரி – சங்கர சங்கர சம்பு – தெம்மாங்கு – சிந்து அ.மாதவையர்

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** சு, மு. ம. பா. (2026). அ.மாதவையாவின் விஜய மார்த்தாண்டம் நாவலில் நாட்டுப்புறக்கூறுகள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 2, –.

## முன்னுரை

1892 ஆம் ஆண்டு முதல் 1925 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் தமிழக பண்பாட்டுச் சீர்த்திருத்ததை நாவல்கள், சிறுகதைகள், பத்திரிக்கை கட்டுரைகள் வாயிலாக எழுத்தாக்கங்கள் வழி நிகழ்த்திக் காட்டியவர் அ.மாதவையா ஆவார். மாதவையா, நடப்பியல் பாங்கிலான சமூக நாவல்களைப் படைத்தார் என்றாலும் நீதி உரைக்கும் நோக்கத்திற்காகவும், நாட்டுப்புறப் பாடல்கள் மீது தமக்கிருந்த நாட்டத்தை நிறைவேற்றுவதற்காகவும் தம் நாவல்களில் நாட்டுப்புற இலக்கியக் கூறுகளைப் பயன்படுத்தியுள்ளார். அதனில் விஜய மார்த்தாண்டம் என்ற நாவலில் காணப்படும் நாட்டுப்புறக்கூறுகளை ஆய்வதாக இக்கட்டுரை விரிகிறது.

திருநெல்வேலி மாவட்டம், ஸ்ரீ வைகுண்டம் தாலுகாவிலுள்ள பெருங்குளம் என்னும் கிராமத்தில் அநந்தநாராயணையர் என்பவருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தவர் அ.மாதவையா. “இவர்களது மூதாதையர்

தெலுங்கு நாட்டிலிலுந்து இடம்பெயர்ந்து பெருங்குளத்தில் குடிறேறியுள்ளனர்"1 (மாதவையாவின் புதல்வர் மா.கிருஷ்ணன் ஆங்கிலத்தில் தயாரித்துள்ள 'The Descent of the P.H.ites' என்ற வரைபடத்தில் அந்த அவதானியின் மரபு வழிவந்தோர் பற்றிக் காணலாம்.) மாதவையாவுக்கு இசை மீது மிகுந்த ஆர்வம் இருந்தது. செவ்வியல் இசையையும் நாட்டுப்புற இசையையும் கேட்டு மகிழ்ந்தார். அவர் படைத்த நாவல்களில் குறிப்பாக விஜய மார்த்தாண்டம் நாவலில் அவருக்குச் சந்தப் பாடல்கள், நாட்டுப்புறப்பாடல்கள் ஆகியவற்றின் மீதிருந்த ஈடுபாட்டைக் காணமுடிகிறது.

## விஜய மார்த்தாண்டம் நாவல்

மறவர் சமூகத்தின் காதல் கதை. நிலவுடைமையாளர்கள் சிற்றின்ப ஆசை காரணமாக செல்வம் தேய்ந்து, நிலைகுலைந்து அழிவதை கதைக்கருவாகக் கொண்டு படைக்கப்பட்ட நாவல் விஜய மார்த்தாண்டம் ஆகும். வீரசங்கிலித்தேவர் என்ற ஜமின்தாருக்கு இரு மனைவியரும் பல விலைமாதர்களும் வைப்பாட்டிகளும் உள்ளனர். புலிமலை ஜமினிலிருந்து வரக்கூடிய செல்வங்களை சிற்றின்ப நாட்டங்களிலேயே கழிக்கிறார். மற்றொரு இளைஞனைக் காதலிக்கின்ற சிவகாமி என்ற இளம்பெண்ணை அடைவதற்காக ஏராளமாக செலவு செய்கிறார். ஜமின் பெயரில் வட்டிக்கு கடன் வாங்குகிறார். இறுதியில் சிறை தண்டனை பெறுகிறார். சிற்றின்ப நாட்டம் செல்வத்தை அழித்து வாழ்வை நிர்மூலமாக்குவதை இந்நாவல் வழி காணமுடிகிறது. இந்நாவலில் திருடர்கள் வழிப்பறி செய்தல், கொள்ளையடித்தல், கொலைசெய்தல், பெண்ணைக் கடத்துதல், நீதிமன்றத்தில் பெண் வழக்காடுதல், தூக்குத்தண்டனை யைக் கடைசிக் கணத்தில் தடுத்தல், முதலிய நிகழ்ச்சிகள் எதிர்பாராத திருப்பங்களைக் கொண்டவையாக வைத்து வருணிக்கப்பட்டுள்ளன.

## நாட்டுப்புற இலக்கியக் கூறுகள்

நாட்டுப்புற மக்களிடம் காணப்படும் நம்பிக்கைகள், சடங்கு முறைகள், பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், விளையாட்டுக்கள், கதைகள் போன்றவற்றின் சாரம்சங்கள் நாட்டுப்புற இலக்கியங்கள் என்று வரையறுக்கப்படுகிறது.

## பழமொழிகள்

மக்களிடம் வழங்கிய பழமொழிகள், எளிய உவமைகள், உருவகங்கள் பெற்றவையாக, நேரடியாக நீதிகளைப் பொன்மொழிகளாகக் கூறுவனவாக அமைந்துள்ளன. அவை வெறும் நீதி மட்டும் உரைப்பனவாக இல்லாமல் இன்பம் பயக்கும் முறையில் கூறப்பட்டவை யாகவும் உள்ளன. தொடக்ககால நாவலாசிரியர்கள் அனைவருமே பழமொழிகளைப் பயன்படுத்தத் தவறவில்லை.

"மந்திரங்கால் மதிமுக்கால்" (வி.மா. பக். 235)
"அடாஅது செய்வார் படாஅதுபடுவார்" (வி.மா. பக். 245)
"வேலியே தின்றால் தெய்வமே காவல்" (வி.மா. பக். 205)
"கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே" (வி.மா. பக். 84)
"ஆறிலும் சாவு நூறிலும் சாவு" (வி.மா. பக். 121)
"பிண நாற்றம் கழுகுக்குத் தெரிவது போல" (வி.மா. பக்.30)
"பாலுக்குக் காவல், பூனைக்குத் தோழன்" (வி.மா. பக்.232)

போன்ற பழமொழிகளை எள்ளல் சுவையுடன் வீரமாமுனிவர், வேதநாயகம்பிள்ளை பயன்படுத்தியது போலவே அ.மாதவையாவும் பயன்படுத்துகிற பாங்கினைக் காணமுடிகிறது.

## நாட்டுப்புறப் பாடல்கள்

நாட்டுப்புறக் கதைகள் போலவே நாட்டுப்புற மக்களின் அன்றாட வாழ்வுடன் நெருங்கிய உறவு பூண்டவை நாட்டுப்புறப் பாடல்களாகும். இப்பாடல்களை இம்மக்கள் நாட்டுப்புற இசையில் பாடி வருகிறார்கள். நவீன நாகரீக வளர்ச்சி பெருகப் பெருக இப்பாடல்கள் அழிந்து வருகின்றன. இந்நிலையை மாதவையா அன்றே உணர்ந்துள்ளார். எளிய மக்களின் பாடல்கள் மீது மாதவையாவுக்கிருந்த ஈடுபாட்டை, 'வி.மா.' நாவலில், விஜய மார்த்தாண்டர் வழியாகப் பின்வருமாறு உரைத்துள்ளார்." (வி.மா. பக்.128,129)

'...தெம்மாங்கு, சிந்து நொண்டி, குறவஞ்சி முதலியவற்றிற்குக் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. கிருதிகளும், பதசாகித்யங்களும். இந்துஸ்தானி மெட்டுப் பாட்டுக்களும், நாடகப் பாட்டுக்களும், இங்கிலீஷ் 'நோட்டுக்கள்' போன்ற பாட்டுக்களுமே இப்பொழுது விரும்பப்படுகின்றன..நாட்டுப் புறங்களில் மறப்பெண்கள் கும்மியடிப் பதையும், பள்பாடுவதையும் பார்க்க எனக் கெப்பொழுதும் ஆசை; சில வண்டிக்-காரர் தெம்மாங்கு பாடுவதும் வெகு நன்றாகக் கேட்டிருக் கிறேன்...'2 (அ.மாதவையாவின் தமிழ் நாவல்கள் ஓர் ஆழ்நிலைப் பார்வை, ராஜ் கௌதமன், பக்.154)

மாதவையா இக்கூற்றின் வழியாக, நாட்டுப் புறங்களில் வழங்கும் கும்மி, தெம்மாங்கு முதலான நாட்டுப்புறப் பாடல்களில் தமக்கிருந்த ஈடுபாட்டைப் புலப்படுத்தியுள்ளார். மாதவையர் உப்பு சுங்க இலாகாப் பணியின் பொருட்டுச் சென்னை மாகாணத்தின் இராமநாதபுரம் முதல் வடக்கே ஆந்திரம் வரைச் சுற்றி வந்துள்ளார். நகரங்களுக்கு வெகு அப்பாலிருந்த கிராமங்களுக்குப் பணியின் காரணமாகச் சுற்றிவந்த மாதவையாவுக்கு நாட்டுப்புற மக்களின் பாடல்களைப் பற்றிய அறிவும், அவற்றில் ஈடுபாடும் ஏற்பட்டிருக்க வாய்ப்பிருந்திருக்கும். மாதவையா தம்முடைய நாவல்கள் மூலம், குறிப்பாக 'வி.மா.' நாவல் மூலமாக, தமிழ்நாட்டு மக்கள் மறக்கத் தொடங்கியிருந்த நாட்டுப்புறப் பாடல்களை நினைவூட்டியுள்ளார். 'விமா.' நாவலில் 'கள்ளர்பாட்டு' எனப்படும் மறவர் பாட்டுக்களையும். ஆண்டிப்பாட்டையும் எழுதியுள்ளார்.

## மறவர் பாட்டு

'வி.மா.' நாவலில் திருடிப் பிழைக்கும் மறவர்கள் பாடுவதாகக் கீழ்வரும் மூன்று பாடல்களை எடுத்துக் கூறியுள்ளார் மாதவையா".

'பனை கறுத்திருக்கும்
பறங்கி சோறு வெளுத்திருக்கும்
அதிலே வடியும் சாற்றைக் குடித்தால்
தலை கிறுகிறுக்கும்.

முக்கலச் சாராயம் பறங்கி
முன்னூறு கோழிமுட்டை
எத்தனை தின்னாலும்

பறங்கி வெற்றிலை தின்னாற்போம்.

கறுத்த கண்களடா.

பறங்கி பருத்த கொண்டையடா
சிறுக்கி முறுக்கி உருக்கி
மனத்தைக் கிறுக்கி விட்டதடா.” (வி.மா. பக்.73)

இப்பாடல்களை நாட்டுப்புறப் பாடல்களிலிருந்து மாதவையா எடுத்தாண்டாரா, அல்லது அவற்றின் சாயலில் தாமே படைத்துக் கொண்டாரா என்பதை அறிந்து கொள்ளச் சான்றெதுவும் கிடைக்க வில்லை.

ஆண்டிப்பாட்டு
'வி.மா.' நாவலில்,
'சங்கர சங்கர சம்பு, சிவ
சங்கர சங்கர சம்பு

### சங்கர சங்கர சம்பு... (வி.மா. பக்.96,97)

எனத் தொடங்கும் நீண்ட ஆண்டிப்பாட்டு மாதவையாவால் நாவலின் கதைக்கேற்பப் பயன்படுத்தப்பட்டுள்ளது. வழக்கில் இருந்த ஆண்டிப் பாட்டு வடிவத்தை ஏற்றுக் கொண்ட மாதவையா, அதில், கதைத் தலைவி சிவகாமிக்கு மட்டும் புரிந்து கொள்ளத் தக்கவிதத்தில் செய்தியை மாதவையாவே படைத்துள்ளார்.

### தாலாட்டு

தமிழ்நாட்டுக் குடும்பங்களில் தாலாட்டுப் பாட்டு என்பது எல்லாச் சாதியினரிடமும் காணக் கூடியதாக உள்ளது. ஒவ்வொரு சாதியினரிடமும் பிற சாதியினரிடமிருந்து வேறுபடுத்திப் பார்க்கத் தக்க விதத்தில் மொழிவழக்கு வேறுபடுகிறது. இதனைச் சாதிமொழி என்பர். பிராமணக் குடும்பங்களில் பேசப்படும் மொழி வழக்கை ஒட்டியே அவற்றின் தாலாட்டுப்பாட்டின் மொழி வழக்கு அமைந் துள்ளது. 'மு.மீ.' நாவலில், விதவை முத்து மீனாட்சி, தன் அண்ணன் குழந்தையைத் தாலாட்டுகின்றபோது 15 அடிகள் கொண்ட நீண்ட ஒரு தாலாட்டுப் பாட்டு இடம் பெறுகிறது”3 (அ.மாதவையா, “முத்து மீனாட்சி” (வானவில் பிரசுரம், சென்னை 1981 பக்.65,66) .

'ஆராரோ ஆராரோ ஆரார் அடித்தாரோ? ஆரடித்து நீ அழறாய் அஞ்சனக் கண்மைகரைய ஆரடித்து நீ அழறாய் அடித்தாரைச் சொல்லியழு மேற்கண்ட தாலாட்டுப் பாட்டில் 'அழறாய்' என்ற சொல்லாட்சி பிராமணச் சாதியினர் வழங்கும் கிளைமொழிச் சொல்லாக உள்ளது குறிப்பிடத்தக்கது. இதுவரை, மாதவையாவின் நாவல்களில் காணத்தகும் மரபுக் கூறுகள் விரித்துரைக்கப்பட்டன. தமிழின் நடப்பியற்பாங்கான சமூக நாவலுக்கு மாதவையாவை முன்னோடி எனக் கூறினாலும், அவர்தம் காலச்சூழலின் தாக்கத்திற்கு உட்பட்டே தமிழ்ச் செய்யுள் இலக்கியத்தின் மரபுக் கூறுகளை விரவி நாவல்களைப் படைத்தார் என்பது புலப்படு கிறது. காவியக் கூறுகளும், நீதி இலக்கியக் கூறுகளும், நாட்டுப்புற இயலின் கூறுகளும் நடப்பியல் கூறுகளோடு கலந்து அமைக்கப் பட்டனவாக அவருடைய நாவல்கள் காட்சியளிக்கின்றன.

'வி.மா' நாவலில், விஜயமார்த்தாண்டரும், அவருடைய காதலி சிவகாமியும் நிலவொளியில் தனிமையில் அமர்ந்து காதல் மொழி பேசும் போது, சிவகாமி பாடும் காதற் சுவைப் பாடல்களை எழுதியுள்ளார். அவ்வாறு அவள் பாடும் பாடல்கள், 'ஸ்திரிபுருஷ ஸம்வாதமாக' (வி.மாபக். 129) அமைவதாக மாதவையா குறிப்பிட்டுள்ளார். இவ்வகைப் பாடல்கள் சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்களில், 'தர்க்கப்பாட்டு' என வழங்கப்பட்டன. பாத்திரம் பாடும் பாடல்களை, தம் காலத்து நாடகங்களில் பாடப்பட்ட பாடல்களின் சாயலில் மாதவையர் அமைத்துள்ளார். 'வி.மா' நாவலில், சிவகாமி பாடுவதாக அமைந்த இரு காதல் பாடல்களுக்கு ஒப்புமை கொண்ட இரு நாடகப்பாடல்களைக் காணலாம்.

காதலியைச் சேரத்துடிக்கும் ஆர்வத்தைக் கட்டுக்கடங்காத முறையில் காதலன் பாடித் தெரிவிக்கிறபோது, காதலி பாடும் பாட்டாக 'வி.மா ' நாவலில் கீழ்வரும் பாடல் காணப்படுகிறது.

'காதலி
நல்ல துடுக்கிது நல்ல கொழுப்பிது
நாணமும் நன்று நன்றே - உனைச்
சொல்லக் குறையிலை கண்டு கொண்டாய்
துணை யாருமில்லை. என்றே
கல்லைக் குனித்த கடவுளராணை!
இங்கேதுஞ் சொலேன் உரையே - இனி
அல்லற்படுத்தாதே ஆக்கப் பொறுத்தனை

**ஆறப் பொறு துரையே (வி.மா.பக். 130)**

சங்கரதாஸ் சுவாமிகளின் பல நாடகங்களில், இதே போன்ற சூழலில் காதலி பாடுவதாக வரும் பாடல்களை 'தர்க்கப்பட்டு' என்றழைத்தனர். மேலே காட்டியுள்ள காதலி பாட்டு 'சுலோசனாசதி' நாடகத்தில் வரும் பாட்டுடன் ஒப்புமை கொண்டுள்ளது.

'தர்க்கப்பாட்டு
இராகம் - பூர்வகல்யாணி தாளம்: ஆதி
பாட்டு
புத்திமதி கெட்டுப் போகத்தாசைப் பட்டுப்
பித்தமு மேலிட்டுப் பேசுவதை விட்டு

**சத்தியத்தைக் கிட்டு தர்மநெறி தொட்டுச்**

**சித்தந் தெளிந்திட்டுச் செய்வீர் இந்தமட்டு4 (சங்கரதாஸ்சுவாமிகள், “சுலோசனாசதி” பக்.13)**இவ்விரு பாடல்கள் வெவ்வேறு சூழலில் பாடப்படினும், அமைப்பு ஏறத்தாழ ஒன்றாக இருத்தலைக் காணலாம். 'வி.மா' நாவலில் விஜய மார்த்தாண்டர் காதல் பாட, அதற்கும் பதிலாகச் சிவகாமி தனக்குத் தெரிந்த சிந்துப் பாடல்களைப் பாடுகிறாள். அவற்றில் ஒன்று கீழ்வருமாறு:

ஐயகோ நான்பெற்ற கோதாய்
அடிபேதாய் நிஜம் ஓதாய் - உனைச்
செய்தென்ன அவன் சூதாய் - அந்த
மாயத்தன மாயாவியின்
நேயத்தினில் நீயாவியை
விட்டிடவோ, வுன் விதியும் இந்த

**மட்டிளிவோ வுன்மதியும்' (வி.மா. பக். 128)**

இப்பாடல் அமைப்பு சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்களான 'அபிமன்யு சுந்தரி'5 (சங்கரதாஸ்சுவாமிகள், "அபிமன்யு சுந்தரி" சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றம் வெளியீடு, சென்னை, 1963) பக்.48, 49) 'சுலோசனா சதி"6 (சங்கரதாஸ் சுவாமிகள், "சுலோசனா சதி" பக்.49), 'சீமந்தனி*7 (சங்கரதாஸ் சுவாமிகள், சீமந்தினி... 1969) பக்.69,70) ஆகியவற்றில் வரும் தர்க்கப்பாடல்களுடன் ஒப்புமை கொண்டதாகும். ஒப்புமைக்காக, 'சீமந்தனி' நாடகத்தில் வரும் ஒரு தர்க்கப் பாட்டினைக் காணலாம்.

'தர்க்கப்பாட்டு
இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ரூபகம்
காவடிச் சிந்து
அந்த மாது மீது மோகம்
கொண்ட சோகம் மிகுதாகம் - ஆகி
ஐயையோ வாடுது தேகம் - இனி
அரை நாழிகை வரையாயினும்
நிலையாகுவதிலையே கெதி
யாதோ கலங்கும் விவேகம் - என்

**ஆவி பிழைத்தல் சந்தேகம்8 (சங்கரதாஸ் சுவாமிகள், சீமந்தினி... 1969) பக்.69)**

இவ்விருபாடல்களின் ஓசை ஒழுங்கிலுள்ள ஒப்புமை குறிப்பிடத்தக்க தாகும். 'வி.மா.' நாவலிலிருந்து இதுவரை எடுத்துக் காட்டப்பட்ட பாடல்கள், காதலர்கள் பாடுவதாக அமைவதோடு, அக்கால நாடகங் களில் பாடப்பட்ட பாடல்களோடு ஒப்புமை கொண்டவையாகவும் இருப்பதை அறியமுடிகின்றது.

## முடிவுரை

விஜய மார்த்தாண்டம் நாவல் மறவர் சமூகத்தை மையமிட்டு அமைவதால் இந்நாவலில் நாட்டுப்புறக்கதைகளும், விடுகதைகளும், பழமொழிகளும், விடுகதைகளும் தாலாட்டுப் பாடல்களும், தர்க்கப்பாடல்களும் பயின்று வந்துள்ளன. இந்நாவலில் கல்லாத மறவர்களின் உரையாடல்களில் கொச்சைத் தமிழ் நடையையும், பிற இடங்களிலெல்லாம் கற்றோர் போற்றும் புலமை நடையையும் பின்பற்றியுள்ளார். இந்நாவல் மறவர் இன மக்களின் பண்பாட்டினை பதிவு செய்துள்ளது. மக்களின் வாழ்வியல் மொழிநடை மற்றும் பாடல் மரபுகளுக்கு நாவலில் முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் நாட்டுப்புறப் பாடல் வடிவங்களையும் அக்கால நாடகப் பாடல் மரபுகளையும் இணைத்துப் பயன்படுத்தியிருப்பது மாதவையாவின் படைப்பாக்கத் திறனை வெளிப்படுத்துகிறது.

## அடிக்குறிப்புகள் (Notes)

1. முதன்மைத் தரவு
2. அ.மாதவையா, விஜய மார்த்தாண்டம் (நாவல்), ஸ்ரீ நிவாஸ. வரதாச்சாரியார் அண்டு கம்பெனி வெளியீடு, முதற்பதிப்பு, 1903, விஜய மார்த்தாண்டம், பக், 73, 84, 96-97, 121, 128-130,205,232,235,245
3. துணைமைத் தரவுகள்

4. அ.மாதவையாவின் தமிழ் நாவல்கள் ஓர் ஆழ்நிலைப் பார்வை, ராஜ் கௌதமன், பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட் வெளியீடு, முதல் பதிப்பு, ஜனவரி.2019, பக்.271,
5. மேலது, பக்.154
6. அ.மாதவையா, “முத்து மீனாட்சி” (வானவில் பிரசுரம், சென்னை, பதிப்பு, 1981 பக்.65,66) .
7. சங்கரதாஸ்சுவாமிகள், சுலோசனாசதி, சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றம், சென்னை, பதிப்பு -1966, பக்.13,
8. சங்கரதாஸ்சுவாமிகள், “அபிமன்யு சுந்தரி” சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றம் வெளியீடு, சென்னை, 1963) பக்.48, 49
9. சங்கரதாஸ் சுவாமிகள், “சுலோசனா சதி” சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றம், சென்னை, பதிப்பு -1966,பக்.49),
10. சங்கரதாஸ் சுவாமிகள், சீமந்தினி, சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றம், சென்னை, 1969) பக்.69,70

© 2026 முனைவர். மகேஷ் பாண்டி சு. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..